# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட/முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு 2013/2014

## (September/October, 2015)

## EC 1112 Fundamentals of Micro Economics

நேரம்: 02 மணித்தியாலங்கள்

முதலாம் வினா உட்பட ஏனைய வினாக்களில் இரண்டைத் தெரிவுசெய்து மொத்தம் மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

---

01. (அ) உற்பத்தி இயல்தகவு வளையியின் அடிப்படை எடுகோள்கள் யாவை?

(06 புள்ளிகள்)

(ஆ) எத்தகைய காரணிகள் அல்லது நிகழ்வுகள் உற்பத்தி இயல்தகவு வளையியின் உட்புற நகர்வொன்றை ஏற்படுத்தக்கூடும்?

(06 புள்ளிகள்)

(இ) அதிகரித்துச் செல்லும் அமையச்செலவை எதிர்நோக்கும் நாடொன்றிக்கான உற்பத்தி இயல்தகவு வளையியொன்றை உருவாக்கி அவ்வுற்பத்தி இயல்தகவு வளையிக் கட்டமைப்பில் பின்வரும் நிகழ்வுகளைக் காட்டுக.

(i) பயிற்றப்பட்ட ஊழியர்கள் பெரும் எண்ணிக்கையில் வெளிநாட்டுக்குக் குடிபெயரல்

(ii) பொருளாதார பின்னடைவு

(iii) சிறப்பான புதியரக வளமாக்கி கண்டுபிடிக்கப்படல்

(iv) பொருளாதார வளர்ச்சி

(12 புள்ளிகள்)

(ஈ) வளங்களின் அமையச் செலவு பற்றி விளக்குக.

(06 புள்ளிகள்)

(உ) அடிப்படைப் பொருளாதார பிரச்சனைக்குத் தீர்வுகாணப்படும் வழிமுறையின் அடிப்படையில் கட்டளைப் பொருளாதாரமொன்றிக்கும், சந்தைப் பொருளாதாரமொன்றிக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

02. (அ) ஒரு பொருளுக்கான நுகர்வோன் கேள்வியைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) கேள்வி விதியினை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) சாதாரண பண்டம், இழிவுப் பண்டம் மற்றும் கிபன் பண்டம் என்பவற்றை வேறுபடுத்துக.

(06 புள்ளிகள்)

(ஈ) "அதிகரித்துச் செல்லும் கேள்வியின் மத்தியிலும் பிரத்தியோக கணினிகளின் விலைகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைகின்றன." பொருத்தமான வரைபடத்தை பயன்படுத்தி இன்நிலையை விளக்குக.

(06 புள்ளிகள்)

(உ) பின்வரும் வரைபடத்தை பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக. வரைபடத்தில் DD கேள்வி வளையியையும், S என்பது அரசாங்கம் விதித்த விசேட உற்பத்தி வரிக்கு முந்திய நிரம்பல் வளையியையும் S+T என்பது வரிக்குப் பின்னரான நிரம்பல் வளையியையும் காட்டுகின்றன.




(i) வரி விதிக்கப்பட முன் சமநிலையில் நுகர்வோர் மிகையைக் காட்டும் பிரதேசம் எது? உற்பத்தியாளர் மிகையைக்காட்டும் பிரதேசம் எது?

(ii) உற்பத்தியாளர் மீது வரி விதிக்கப்பட்ட பின்னர் நுகர்வோர் மிகையையும் உற்பத்தியாளான் மிகையையும் காட்டும் பிரதேசம் எவை?

(iii) வரியினால் ஏற்படும் மீளமுடியா இழப்பை காட்டும் பிரதேசம் எது?

(iv) அரசாங்கத்தால் திரட்டப்பட்ட வரி வருவாயை காட்டும் பிரதேசம் எது?

(08 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

03. (அ) குறைந்து செல்லும் விளைவுவிதியும், அளவுத்திட்ட விளைவுவிதியும் நிறுவனத்தின் உற்பத்திச் செலவுகளை எவ்வாறு பாதிக்கும் என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) எல்லாச் சந்தை அமைப்புக்களிலும் இலாப உச்சப்படுத்தலுக்கு எல்லை வருவாய் எல்லை செலவுக்கு சமப்படுவது ஏன் அத்தியாவசியமானது என்பதை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) நிறைபோட்டி நிறுவனமொன்றின் நீண்டகால சமநிலையை விளக்குக.

(10 புள்ளிகள்)

(உ) "நிறைபோட்டி சந்தையில் காணப்படும் நிறுவனமானது விலையினை ஏற்போனாக இருக்கின்றது." இக்கூற்றினை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? ஆம் எனின் காரணம் தருக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

04. (அ) நெகிழ்ச்சிக் கணிப்பீட்டின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவன அட்டவணையானது X பொருளின் விலைக்கும் Y பொருளின் தொகைக்கும் இடையிலான தொடர்பு தரப்பட்டுள்ளன.

| $P_x$ | $Qd_y$ |
|---|---|
| 10 | 100 |
| 20 | 50 |

(i) குறுக்கு கேள்வி நெகிழ்ச்சியைக் கணிப்பீடு செய்க.

(05 புள்ளிகள்)

(ii) உமது விடையிலிருந்து எவ்வகையான பொருள் என்பதைக் கூறி விளக்குக?

(05 புள்ளிகள்)

(இ) எல்லை உற்பத்திக்கும் எல்லைச் செலவுக்கும் இடையிலான தொடர்பினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக

(அ) பொருளாதார வளங்கள்

(ஆ) நீண்டகால உற்பத்தி

(இ) அகச்சிக்கனங்கள்

(ஈ) விலைசார் கேள்வி நெகிழ்ச்சி

(உ) புறநடை நிரம்பல்

(5*6 = 30 புள்ளிகள்)